# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

**செய்தி தகவல் எண்.** 3/2016 **நாள்** 02.08.2016

## மாநில தேர்தல் அலுவலர்கள் நியமனம்

ஊரக உள்ளாட்சி தேர்தல்கள், 2016 :-

நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலின் போது தேர்தலை நடத்த ஏதுவாக ஊரக வளர்ச்சி இயக்குநரை மாநில தேர்தல் அலுவலராக (State Election Officer) 18.07.2016ல் நியமித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 6 (1)ன் கீழுள்ள அதிகாரத்தின்படி இவ்வுத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மாநில தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஊராட்சிகளின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் போன்ற பணிகளையும், கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல், தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்தல்கள் நடத்தும் பணியினை இவர் மாநில தேர்தல் ஆணையத்துடன் ஒருங்கிணைந்து மேற்பார்வை செய்வார்.

மேலும், மாநில தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது தேர்தல் தொடர்பாக ஒப்படைக்கும் பணியினையும் மற்றும் கடமைகளையும் செய்வார்.

இவ்வுத்தரவு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சட்டபூர்வ ஆணை எண்.1/2016/ TNSEC/PE1-ன் வழி 18.07.2016ல் வழங்கப்பட்டு தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.169, நாள் 19.07.2016ல் வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சி தேர்தல்கள், 2016 :-

பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தேர்தல்களை நடத்திட ஏதுவாக 2006ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளின், விதி 6-ன்படி மாநில தேர்தல் அலுவலர்கள் நியமனங்கள் வரையறுக்கப்பட்டுள்ள.

அதன்படி, பேரூராட்சிகளின் நேர்வில் பேரூராட்சிகளின் ஆணையாளர் அல்லது பேரூராட்சிகளின் இயக்குநர், நகராட்சியின் நேர்வில் ஆணையாளர் அல்லது நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் மாநில தேர்தல் அலுவலராக இருப்பார். மாநிலத்திலுள்ள பேரூராட்சிகள் அல்லது நகராட்சிகளுக்கு, வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவதற்கும், அனைத்துத் தேர்தல்களையும் நடத்துவதற்கும் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைப் பணியினைச் செய்பவராக இருப்பார். மாநில தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது அவரிடம் ஒப்படைக்கப்படக்கூடிய பிற செய் கடமைகளையும் அவர் நிறைவேற்றுவார்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

02/08/16
மக்கள் தொடர்பு அலுவலர்